மனச்சோர்வை மேற்கொள்ள

அறிக்கை

தேவனே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்[1] – உம்முடைய வார்த்தையின்படி – இந்த ஒடுக்கத்தின் ஆவியிலிருந்து என்னை விடுதலையாக்கும் என்று கேட்கிறேன்.[2]

கர்த்தாவே, உம்முடைய தீர்மானத்தின்படி நான் அழைக்கப்பட்டு, உம்மிடத்தில் நான் அன்புகூருகிறபடியால், என் வாழ்வில் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்று நன்றி கூறுகிறேன்.[3]

இயேசுவின் நாமத்தில் எல்லா எண்ணத்தையும் நான் சிறைப்படுத்தி அதை தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படுத்துகிறேன்.[4] இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவை தரித்துக்கொள்ளுகிறேன்.[5]

இப்போதும், நம்பிக்கையின் வல்ல தேவன், பரிசுத்த ஆவியின் பலத்தினாலே எனக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் என்னை நிரப்பும்.[6]

பரிசுத்த ஆவியானவரே என்னை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தும்,[7] பொல்லாங்கனுடைய[8] எல்லா பொய்க்கும் என்னை விடுதலை ஆக்கும். [9]

கர்த்தாவே இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், என் மனம் புதிதாகிறதினாலே நான் மறுரூபமாக எனக்கு உதவி செய்யும்.[10]

நன்றி பிதாவே. இயேசுவின் நாமத்தில். ஆமென்!

[1] யோவேல் 2:32
[2] ஏசாயா 61:3
[3] ரோமர் 8:28
[4] 2 கொரி. 10:5
[5] 1 தெச. 5:8
[6] ரோமர் 15:13
[7] யோவான் 16:13
[8] யோவான் 8:44ஆ
[9] மத்தேயு 6:13
[10] ரோமர் 12:2

மனச்சோர்வை மேற்கொள்ள அறிக்கை

1950–களில், ஒரு இருண்ட கனமான மேகத்தைப் போல எனக்கு மீண்டும் மீண்டும் மனச்சோர்வு ஏற்படும் பிரச்சனை இருந்தது. நான் எவ்வளவு அதிகமாக ஜெபித்து உபவாசித்தேனோ, அது அவ்வளவு மோசமாக துவாங்கியது. ஒரு நாள் நான் எனது தீர்வுகளின் முடிவுக்கு வந்தேன், அப்போது ஏசாயா 61:3இல் உள்ள ஒரு சொற்றொடர் என் கவனத்தை ஈர்த்தது. நான் ஒரு ஆவியை எதிர்கொண்டுள்ளேன் என்பதையும் – நான் எனக்குள் இருக்கும் வெறும் மனதளவிலான அல்லது உளவியல் ரீதியான நிலைமைகளை கையாளவில்லை என்றும் திடீரென்று உணர்ந்தேன்.

எனது எதிரியின் அடையாளத்தை கண்டடைந்து ஒரு மகத்தான முன்னேற்றமாக இருந்தது. என் பிரச்சனைக்கு தீர்வைக் கொண்டு வரும் என்று நான் நம்பிய ஒரு வசனம் கிடைத்தது. யோவேல் 2:32. நான் இதையும் ஏசாயா 61:3ஐயும் சேர்த்து ஒரு குறிப்பிட்ட, வேதப்பூர்வமான ஜெபத்தை ஜெபித்தேன் (திருப்பி பார்க்கவும்).

நான் ஜெபித்தவுடன், விடுதலை பெற்றேன். அழுத்தம் நீங்கியது. ஆனால் விடுதலை பெறுவது ஒன்று என்றால், விடுதலையில் தரித்திருப்பது வேறொன்று ஆகும்.

தேவன் என் மனதை இந்த பிசாசின் அழுத்தத்திலிருந்து விடுவித்துவிட்டார் என்பதை எனக்குக் காட்டத் தொடங்கினார், இப்போது என் மனதை மீண்டும் திருத்தி அமைப்பது என் கையில் இருந்தது.

நம் மனதை, நம்பிக்கையில் (நன்மையின் உறுதியான எதிர்பார்ப்பில்) பயிற்றுவிப்பது நம் கையில்தான் உள்ளது. இது ஐந்து நிமிடத்தில் வரவில்லை; ஐந்து வருடங்களுக்கும் மேல் ஆனது. ஆனால் நான் அதில் செய்த ஒவ்வொரு பயிற்சியும் மதிப்புக்குரியது.

இரட்சிப்பின் தலைச்சீறாவை எடுத்துக் கொள்ளுங்கள் – நம்பிக்கையின் தலைக்கவசம். அதை தரித்துகொள்ளுங்கள். உங்கள் மனதை மூடிக்கொள்ளுங்கள். உங்கள் எண்ணங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்; தேவனுடைய வார்த்தைக்கு ஏற்ப, அவைகளைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வாருங்கள். அற்புதமான முடிவுகளை அனுபவியுங்கள்!

டெரிக் பிரின்ஸ் (1915–2003)

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au